# DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NANNILAM

| | | |
|---|---|---|
| Case No. | : | C. C. No. 09 / 2025 |
| Deposition of witness | : | P.W. – 10 |
| Name | : | அய்யப்பன் |
| Father's /Husband Name | : | நந்தகோபால் |
| Village | : | பேரளம் |
| Taluk | : | நன்னிலம் |
| Age | : | 50 |
| Occupation | : | நகை மதிப்பீட்டாளர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 30th day October, 2025.
Accused present.

**முதல் விசாரணை:–**

நான் தற்போது பேரளம் பாரத ஸ்டேட் வங்கியில் நகை மதிப்பீட்டாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு நன்னிலம், பாரத ஸ்டேட் வங்கியில் நகை மதிப்பீட்டாளராக பணியில் இருந்தேன். இந்த வழக்கில் கடந்த 09.12.2024–ம் தேதி இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட நகைகளை மதிப்பீடு சான்று வழங்க வேண்டி நன்னிலம் காவல் ஆய்வாளர் கேட்டுக்கொண்டதன் பேரில் நான் இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட எஸ் கொக்கி விலகிய நிலையில் உள்ள சங்கிலியுடன் நூலில் சேர்த்து கட்டப்பட்ட இரண்டு தங்க தகடுகளுடன் கூடியதை நான் ஆய்வு செய்து பார்த்தபோது மொத்த எடை 9.770 மில்லிகிராம் இருந்தது. அதில், கவரிங் செயின் எஸ் கொக்கி எடை 8.420 மில்லி கிராம் இருந்தது. அதிலிருந்த தங்க கொப்பிகள் இரண்டும் (19 கேரட்டில்) எடை 1.350 மில்லி கிராமில் இருந்தது. நான் ஆய்வு செய்ததில் மேற்படி தங்க கொப்பில் இரண்டு மட்டும் பவுன் ஆகும். மற்றவை கவரிங் ஆகும். அது குறித்து நான் அறிக்கை வழங்கினேன். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் நகை மதிப்பீட்டாளின் அறிக்கையில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அது என்னால் கொடுக்கப்பட்டது தான். அந்த அறிக்கை **அ.சா.ஆ.14** ஆக குறியீடு செய்யப்படுகிறது. நன்னிலம்போலிசார் என்னை விசாரித்தார்கள். தற்போது என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள தடயத்தை தான் நான் ஆய்வு செய்து அறிக்கை வழங்கினேன்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை** :

என்னை போலிசார் எந்த தேதியில் விசாரித்தார்கள் என்றால் நினைவில்லை. என்னை யார் விசாரித்தார்கள் என்றால் ஒரு உதவி ஆய்வாளர் விசாரித்தார்.

**மறு விசாரணை**

இல்லை.

M S BHARATHIDHASAN

Digitally signed by M S BHARATHIDHASAN
Date: 2025.10.30 10:15:04 +0530